**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.1/2018 –** P.W.23

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. சரவணன் | Father's Name. மகாலிங்கம் |
| Village : தஞ்சாவூர் | Age: 49 |
| Date :09.07.2026 | தொழில் : காவல் ஆய்வாளர் |

நம்பர்: 9498104275

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **9th day of July 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamakeswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **9th day of July 2026.**

Signature of Interpreter

**(எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக அவர்களது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராக அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச.பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )**

**சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு கூடுதல் குறுக்கு விசாரணை.**

நாங்கள் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கைப்படியும், அசா.1 முதன் முதலாக கொடுத்த அசாஆ.1 ஆன புகாரின் அடிப்படையிலும், எனது புலன் விசாரணையின் அடிப்படையிலும், கடத்தப்பட்டதாக சொல்லப்படும் குழந்தை பிறந்த 3றாவது நாளிலேயே, அந்த குழந்தையின் தாயாரான அசா.2

திருமதி. சுகன்யாவிடம் அவரது கணவர் சண்டைப்போட்டுவிட்டு பிரிந்து சென்றுவிட்டார் என்று சொன்னால் சரிதான். எனது புலன் விசாரணைப்படி, கடத்தப்பட்டதாக சொல்லப்படும் குழந்தையை, எத்தனை முறை எதிரிகளிடம் அசா.2 ஒப்படைத்துள்ளார் என்று சொன்னால் அதுப்பற்றிய விபரம் எனது புலன் விசாரணையில் தெரியவரவில்லை.

புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கைப்படி, குழந்தை கடத்தப்பட்டதாக சொல்லப்பட்ட தேதி எதுவென்றால் 11.02.2016. நான் குற்ற அறிக்கையில் குழந்தையை எந்த தேதியில் கடத்தப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் 03.02.2016. அசா.1 கொடுத்ததாக சொல்லப்படும் அசாஆ.1றான புகார் அவசர கதியில் கொடுக்கப்பட்டதல்ல என்று சொன்னால் சரிதான். ஒருமாதம் கழித்து கொடுத்துள்ளார். அவ்வாறான சூழ்நிலையில், குழந்தையை கடத்தப்பட்டதாக சொல்லப்பட்ட தேதி தவறாக சொல்லப்பட்டது என்று அசா.1னிடமோ, அவரது மகளான குழந்தையின் தாயாரான அசா.2டிடமோ விசாரித்து, ஏதேனும் மறு வாக்குமூலம் பதிவுசெய்துள்ளோமா ? என்றால் இல்லை.

கடத்தப்பட்டதாக சொல்லப்படும் குழந்தையை நாங்கள் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் ஒப்படைத்ததாக சொல்லப்படும்பொழுது, என் முன்னிலையில்தான் அந்த குழந்தையை தங்களது பாதுகாப்பில் ஒப்படைக்ககோரி குற்ற பல்வகை மனு எண்.107/2017லினை, அசா.2 சுகன்யா தாக்கல் செய்து அதில் இந்நீதிமன்றத்தில் மசா.1றாக, இந்த அசா.2 திருமதி. சுகன்யாவும், மசா.2டாக இந்த அசா.1 திருமதி. ஜெயந்தியும் சாட்சிய வாக்குமூலம் அளித்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த சாட்சிய வாக்குமூலங்கள்தான் தற்போது காட்டப்படுவது என்று சொன்னால் சரிதான். மேற்படி மனுவில் சுகன்யா அளித்த சாட்சிய வாக்குமூலம் **நீமசாஆ.1**.

மேற்படி மனுவில் மேற்படி ஜெயந்தி அளித்த சாட்சிய வாக்குமூலம் **நீமசாஆ.2**. (மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கு கோப்புடன் உள்ள நீதிமன்ற ஆவணங்கள், அதனால் மேற்படி ஆவணங்களை எதிரிகள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய இயலாது என, எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு அறிவுறுத்தப்பட்டு சான்றாவணங்களாக குறியீடு செய்யப்படுகிறது.) கடத்தப்பட்டதாக சொல்லப்படும் குழந்தையை இடைக்கால பொறுப்பில் பெறுவதற்காக மேற்படி மனுசம்பந்தமாக அசா.1 மற்றும் 2 அளித்த சாட்சிய வாக்குமூலங்களில், எங்காவது குழந்தையை இவ்வழக்கின் குற்ற அறிக்கையில் சொல்லப்பட்டதுபோல, மாதாகுளம் அருகே உள்ள கழிவறையிடம் கடத்தப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதா ? என்றால் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை. அந்த சாட்சிய வாக்குமூலங்களில், குழந்தையை கடத்தப்பட்டதாகவே சொல்லவில்லை என்றும், முதலில் மேற்படி சுகன்யா குழந்தை பத்திரமாக உள்ளதாக அவரது அம்மாவிடம் கூறியதாகவும், அதன்பின்னர் தொலைந்துவிட்டதாகவும், அவர்கள் சாட்சியமளித்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். ஆனால் குழந்தையை தன்னிடம் பழகியவர்கள் தூக்கி சென்றுவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். மேற்கண்ட சாட்சிய வாக்குமூலத்தில் குழந்தையை கடத்தப்பட்டதாக சொல்லப்பட்ட அன்றே அது சம்பந்தமாக வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் அசா.2 புகார் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார்களா ? என்றால் இல்லை. குழந்தை கடத்தப்பட்டதாக சொல்லப்படும் தேதி புகார், முதல் தகவல் அறிக்கை மற்றும் நான் தாக்கல் செய்த குற்ற அறிக்கை ஆகியவைகளுக்கு இடையே வேறுபட்டதாக உள்ள நிலையில், குழந்தை கடத்தப்பட்டதாக சொல்லப்பட்ட அன்றே, என்னிடம் அசா.1 மற்றும் 2 அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில், ஏதேனும் புகார் வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டதா ? என்பதை உறுதிப்படுத்த நான் அதுசம்பந்தமாக, மேற்படி காவல் நிலையம் சென்று விசாரித்தேனா ? என்றால் இல்லை.

தற்போது காட்டப்படும் 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலமானது, நான் பதிவு செய்ததுதானே என்றால் ஆமாம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில், "கடந்த 2015 ஆம் வருடம் ஒருநாள் மதுரை, வாடிப்பட்டி மாதா கோவிலிடம், இவ்வழக்கு எதிரிகள் இருவரும் இருந்தபொழுது மதியம் 03.00 மணியளவில், அசா.2 சுகன்யா, அவரது கடத்தப்பட்டதாக சொல்லப்படும் குழந்தையுடன் உட்கார்ந்துகொண்டு அழுதுகொண்டிருந்ததாகவும், அப்போது அங்குதான் அவர்களுக்குள் அறிமுகம் ஏற்பட்டதாகவும், பின்னர் அங்கிருந்துதான் எதிரிகளும், அசா.2 மற்றும் கடத்தப்பட்டதாக சொல்லப்படும் குழந்தையும், வேளாங்கண்ணி வந்ததாகவும்", சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேலும் அந்த வாக்குமூலத்திலேயே, "குழந்தையை நாங்கள் பார்த்துக்கொண்டதாகவும், மேற்படி சுகன்யாவின் நடவடிக்கை சரியில்லாமல் இருந்ததாகவும், வேளாங்கண்ணியில் இருந்த சமயத்தில், மேற்படி சுகன்யா தங்களது செல்போனை வாங்கி 93603 30432, 70926 78770 என்ற நம்பர்களில் இருந்து அவரது அம்மாவிற்கு பேசி வந்ததாகவும் சொல்லியுள்ளார்" என்று சொன்னால் சரிதான். மேலும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில், "எதிரிகள் இருவரும், மேற்படி சுகன்யா மற்றும் அவரது குழந்தை மற்றும் வேளாங்கண்ணியில் அவர்களைப் போலவே, தங்கியிருந்த மேரி அவரது மகள் திவ்யா, ராமு ஆகியோர்கள் எல்லாம் திருநெல்வேலி சென்றதாகவும், திருநெல்வேலியிலிருந்து மேற்படி சுகன்யா, அவரது அம்மா வீட்டிற்கு துணிகள் எடுத்துவர மேரி மகள் திவ்யாவுடன் சென்றதாகவும், அப்போது எதிரிகள், மேற்படி குழந்தையுடன் அந்தோணியார் கோவிலில் இருந்ததாகவும், துணியை எடுத்துக்கொண்டு சுகன்யா வந்த பின்னர் அங்கிருந்தே அவரின் அம்மாவிற்கு, 1ம் எதிரி பேசியதாகவும், 1ம் எதிரியே மேற்படி சுகன்யாவின் அம்மாவிடம் எதற்கு தனியாக குழந்தையுடன் சுகன்யாவை அனுப்பினீர்கள் ? என விசாரித்ததாகவும், அப்போது குழந்தையை பத்திரமாக பார்த்துக்கொள்ளுங்கள் என்று மேற்படி

சுகன்யாவின் அம்மாவே எதிரிகளிடம் சொன்னதாகவும்" சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேலும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில், "அன்று இரவு மேற்படி புளியம்பட்டியிலேயே அவர்கள் அனைவரும் தங்கியிருந்ததாகவும், குழந்தையை எதிரிகளிடம் கொடுத்துவிட்டு வேளாங்கண்ணிக்கு, தான் மட்டும் செல்வதாக மேற்படி சுகன்யா திருநெல்வேலி ரயிலுக்கு சென்றதாகவும், ஆனால் ரயில் சென்றுவிட்டதால், புளியம்பட்டி சர்ச்சிற்கு திரும்ப வந்துவிட்டதாகவும், அப்போது ஊர்காரர்கள் மேற்படி சுகன்யாவை விசாரித்து, எதிரிகள் மீது சந்தேகப்பட்டு, அவரது அம்மாவிற்கு போன் செய்து சொன்னதாகவும், மறுநாள் காலையில் அவரது அம்மா வருவதாக சொன்னதாகவும், போலீசாருக்கு போன் செய்தவுடன் போலீசார் வந்து விசாரித்து குழந்தையையும், சுகன்யாவை அவரது தாயார் அழைத்துச் சென்றதாகவும், சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

மேலும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில், அதனைத் தொடர்ந்து "எதிரிகள் மதுரை வாடிப்பட்டி மாதா கோவிலுக்கு வந்துவிட்டதாகவும், அதன்பின்னர் மீண்டும் மேற்படி சுகன்யா அவர்களை தூத்துக்குடிக்கு வரசொன்னதாகவும், அதனடிப்படையில் எதிரிகள் சென்றதாகவும், அப்போது சுகன்யா வரவில்லை என்றும், அதனால் எதிரிகள் மீண்டும் வாடிப்பட்டி பஸ் நிலையம் வந்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது" என்று சொன்னால் சரிதான். மேலும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில், "மேற்படி சம்பவத்திற்கு பின்னிட்டு மறுநாள் மீண்டும் மேற்படி சுகன்யா எதிரிகளுக்கு போன் செய்து, மதுரை மாட்டுத்தாவணி பஸ் நிலையம் வர சொன்னதாகவும், அதற்கு எதிரிகள் உன்னால் ஏகப்பட்ட பிரச்சனை என்று சொன்னதாகவும், அப்போது மேற்படி சுகன்யா, தான் குழந்தையுடன் பஸ் ஏறிவிட்டதாகவும் சொன்னதால் எதிரிகள் சென்று மேற்படி சுகன்யாவையும், குழந்தையையும் அழைத்து வந்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது" என்று

சொன்னால் சரிதான். மேலும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில், "மேற்படி சுகன்யா, குழந்தை மற்றும் எதிரிகள் அங்கிருந்து நேராக ரயில் மூலம் ஈரோடு சென்றதாகவும், அவர்கள் 4 பேரின் பேக்குகளை அவர்களே ரயில் பொருள் பாதுகாக்கும் மையத்தில் வைத்ததாகவும்", சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேலும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில், "மேற்படி சுகன்யா தனது வீட்டுக்காரன் துரோகம் செய்துவிட்டான். பலிவாங்கனும், கொலை செய்யனும், அதற்கு யாராவது ஆள் இருந்தா பாருங்க, எனக்கு இன்னொரு கல்யாணம் செய்து வைங்க என்று சொன்னதாகவும், அதன்பின்னிட்டு 1ம் எதிரியும், சுகன்யாவும் அவரது குழந்தையுடன் நாகூர் வந்ததாகவும், அதன்பின்னிட்டு அவர்கள் வேளாங்கண்ணி வந்ததாகவும்" சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்கண்டவாறு 1ம் எதிரி ஒப்புதல்வாக்குமூலம் அளிக்கப்பட்டதாக சொல்லப்படும் நிலையில், அதற்கு எதிராக அசா.1 மற்றும் 2 என்னிடம் குவிமுச.பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலங்கள் அளித்துள்ள நிலையில், அது சம்பந்தமாக நான் யாரையாவது விசாரணை செய்தேனா ? என்றால் இல்லை.

தேனியில் அசா.1 மற்றும் 2 சாட்சியமளித்ததுபோல, காவல் நிலையத்தில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்பது குறித்தாவது, நான் விசாரணை செய்தேனா ? என்றால் இல்லை. அசா.2டின் குழந்தையை இவ்வழக்கின் குற்ற அறிக்கையில் நான் சொல்லியுள்ளதுபோல, எதிரிகள் கடத்தவில்லை என்றும், அசா.2தான் தனது குடும்ப பிரச்சனை காரணமாக, மேற்படி குழந்தையை வளர்க்க முடியாமல் எதிரிகளிடம் ஒப்படைத்தார் என்றும், பின்னிட்டு எதிரிகளிடம் அவரும், அவரது தாயாரும் பணம் கேட்டு பிரச்சனை செய்ததால், அதை எதிரிகள் தராததால் வேளாங்கண்ணியில் வைத்து குழந்தையை கடத்தியதுபோல, தவறான புகார்

கொடுக்கப்பட்டது என்றும், அந்த விவரம் தெரிந்தும் அழுத்தத்தின் காரணமாக தவறான குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.09 15:59:32
+0530